வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) அங்கு இருந்து அது வந்தால்தான் எடுக்க முடியும். (குறுக்கீடு) சட்டம் படித்தவர் என்று பெயர் தானே தவிர, எந்த விவரமும் தெரியாமலேயே கேள்வி கேட்டுப் பழகி விட்டீர்கள். (குறுக்கீடு) கன்சிடரேஷனுக்கு சில பில்களுக்கு அவருடைய ஒப்புதல் வர வேண்டும். உட்காருங்கள்.

வினா எண் 24, திரு. ஆ. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 25, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

25—

வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஒப்படை செய்தல்

*108493—திரு. கே. ஆர். முருகானந்தம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக உறுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நில ஒப்படை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிலம் ஒப்படை செய்யப்பட்டது?

(இ) அந்த நிலத்திற்கு எவ்வளவு ரூபாய் நிலக் கிரையம் பெறப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு வீட்டுமனை ஒப்படை செய்ய 13-9-1995-ல் வருவாய்த் துறை அரசாணை எண் 865 மூலம் அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. 5 ஹெக்டேர் நிலம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளது. நிலக் கிரயம் தற்காலச் சந்தை விலையில் கொடுக்க வசூல் செய்யப்படுகிறது.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் தொழிலாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு 5.36.5 ஹெக்டேர் நிலத்தை வீட்டுமனைப் பட்டா வழங்க ஒப்படை செய்ததற்காக, அந்தத்

1996 பிப்ரவரி 16]

தொழிலாளர்களின் சார்பாக, தொழிலாளர் நலன் காக்கும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மேற்படி ஒப்படைப்பு ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலிக்க ஆணையிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா அந்த ஒரு மடங்கு சந்தை மதிப்பு இல்லாமல் ஒப்படை செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயலாது.

முற்பகல் 10-20

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4½ ஆண்டு காலத்திலே நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே, ஏழைத் தொழிலாளர்களுக்கும், வறுமைக் கோட்டிலே இருப்பவர்களுக்கும், நலிந்தோர்களுக்கெல்லாம் இலவசமாக பல வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குகிறபோது, இதை மறுபரிசீலனை செய்து இந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏதாவது கன்செஷனில் ஒரு மடங்கு சந்தை மதிப்பு இல்லாமல் வழங்க முடியுமா? கடந்த 4½ ஆண்டுக் கால புரட்சித் தலைவி ஆட்சியிலே எத்தனை பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது? இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு அவர்களுக்கு எங்கேயும் நிலம் இல்லாமல் இருந்திருக்க வேண்டும். நிலமே இல்லாமல் இருக்கவேண்டும். அவர்களுடைய வருட வருமானம் 12000- க்கும் குறைவாக இருக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வருட வருமானம் ரூ. 12000-க்குக் குறைவாக உள்ளவர்கள் பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கிற போது இப்படி ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து அவர்களுக்கு அரசு நிலத்தை ஒதுக்கிக் கொடுத்ததே முன்னுரிமை தான். இல்லாவிட்டால் எவ்வளவோ பேர் வீட்டு மனைப் பட்டா பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் இருக்கிற போது, அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால் அதுவே முன்னுரிமை தான், இரண்டாவதாக முன்னுரிமை எதுவும் கொடுக்க இயலாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.